இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 06 JUNE-2023

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



## தேவ சமூகத்தை எட்டிய ஜெபங்களும், மனிதனுடைய பாவங்களும்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது **Digital** முறையில் நம்முடைய இணையதளத்திலும்
**WWW.JESUSLIVES.IN**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். **லூக்கா 18:13-ல் தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்**. ஆம் நம் தேவன் நம்மேல் கிருபையாயிருக்கிறவர். கடந்த மே மாதம் 1-ஆம் தேதி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து நடைபெற்ற 23-ஆம் ஆண்டு ஸ்தோத்திரக் கூட்டத்தைத் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். திரளான ஜனங்கள் கூடி வந்து கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றனர். தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்களை தேவன் வல்லமையாய்ப் பயன்படுத்தினார். கர்த்தருடைய வல்லமை இறங்கி அநேகரை விடுதலையாக்கியது. அதே போல இரண்டாவது வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெற்ற உபவாசக் கூட்டங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். தொடர்ந்து வானத்தின் வாசலில் இன்னும் பல எழுப்புதல் கூட்டங்களை நடத்தவும், நமது வானத்தின் வாசல் ஜெபமையம் ஒரு எழுப்புதலின் மையமாக மாற ஜெபித்துக் கொள்ளுங்கள். கடந்த மே மாதம் முழுவதும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் எழுப்புதல் கூட்டங்களை நடத்த தேவன் கிருபை செய்தார். சென்னையில் உபவாச ஜெபம், நாசரேத் பிள்ளையன் மனையில் உயிர்மீட்சிக் கூட்டங்கள், மதுரை எழுப்புதல் உபவாச ஜெபம், திருச்சியில் பேரின்ப பெருவிழா கூட்டங்கள் அனைத்தையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். தொடர்ந்து நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் **Youtube** சேனலில் ஒளிபரப்பாகும் **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம், நம்பிக்கையின் இரவு நிகழ்ச்சிகள்** ஆசீர்வாதமாக வெளிவர, அதை பார்க்கிற அநேக மக்கள் இரட்சிக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து நம்முடைய அலுவலகத்திற்கு ஏற்ற உதவியாளர்கள் கிடைக்கவும், சகல ஊழியங்களையும் நேர்த்தியாக செய்யவும் கருத்தாய் ஜெபியுங்கள். உங்கள் ஜெபத்தாலும் காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்கி, இயேசுவின் நாமத்தில் ஆதரிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



*இயேசுவின் பணியில்,*

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

# தேவ சமூகத்தை எட்டிய ஜெபங்களும், மனிதனுடைய பாவங்களும்




சகோ.ட.வின்சென்ட்ராஜ்

**அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடுகிற சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது யாத் 2:23**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நாம் வாழும் இந்த கடைசி காலத்தில் எங்கு பார்த்தாலும் கூக்குரல், வேதனையின் சத்தம், மனிதர்கள் வீதிகளில் இறங்கிப் போராடுகிறார்கள். அவர்களின் சத்தத்தை எந்த ஒரு ஆட்சியாளரும் கேட்பதாகவோ, செவிசாய்ப்பதாகவோ இல்லை. அதற்கு மாறாக அவர்களை ஒடுக்கவும், அடக்கவும் தான் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். மனிதர்களின் கூக்குரல் ஆளுகை செய்கிறவர்களுக்கு கேட்பதே இல்லை. ஆனால் இஸ்ரவேல் ஜனங்களுடைய புலம்பல், அவர்கள் எகிப்திலே பட்டபாடுகள், துயரங்கள், கூச்சல்கள் பார்வோனின் காதுகளில் கேட்டாலும், நீதி செய்யவோ இரக்கம் காட்டவோ இல்லை. இப்படிப்பட்ட இக்கட்டான, கைவிடப்பட்ட, கடினமான சூழ்நிலையில் அவர்களின் முறையிடுதல், புலம்பலின் சத்தம் தேவசமூகத்தில் எட்டினது. இன்றைக்கு நம்முடைய முறையிடுதல், வேதனையின் சத்தம் மனிதனுக்கு கேட்கிறதோ இல்லையோ, நம்முடைய கதறல் நம் கூட இருக்கின்ற மனிதனுக்கு கேடகிறதோ இல்லையோ, அது கணவனாக இருக்கலாம், மனைவியாக இருக்கலாம், கூட பிறந்தவர்களாக இருக்கலாம், நம்முடைய நண்பர்களாகவும் இருக்கலாம். இவர்களுக்கெல்லாம் நம்முடைய வேதனையின் சத்தம் கேட்கிறதோ இல்லையோ தேவனுக்கு கேட்கிறது. ஆகவேதான் ஆண்டவராகிய தேவன் சொன்னார் யாத் 3:9-ல் இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என்

சந்நிதியில் வந்து எட்டினது என்றார். நம்முடைய தேவன் யார்? அவர் உயரமும், உன்னதமுமான இடத்தில் வாசம் செய்கிறவர், மனிதன் வானத்தையும், பூமியையும் அளவிட முடியாது. கிழக்கிற்கும், மேற்கிற்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரத்திற்கு நம்முடைய பாவங்களை நம்மை விட்டு அகற்றி விடுகிறார். அவ்வளவு உயரமும், தூரமும் வாழுகின்ற தேவன் நம் அருகில் இருப்பவர்களை விட, நம்முடைய கூக்குரலையும், துயரங்களையும் கேட்கிறார். இன்றைக்கு பூமியிலே மனிதர்கள் எழுப்பும் கதறல்கள், கூக்குரல்கள் தேவசமுகத்திற்குப் போய் எட்டுகிறது. ஆதி 4:10-ஐ வாசித்துப் பாருங்கள் காயீன் தன் தம்பியாகிய ஆபேலை கொலை செய்து விட்டான். காரணம் அவன் தேவனுடைய அன்பைப் பெற்று விட்டான், இரக்கத்தைப் பெற்று விட்டான். இதைத் தாங்கிக் கொள்ள முடியாத காயீன் அவனைப் பகைத்துப் பொறாமை கொண்டு அவனை கொலை செய்து விட்டான். அந்த இரத்தம் என்ன செய்தது தெரியுமா? தேவனை நோக்கிக் கதறியது, முறையிட்டது, தேவசமூகத்தை வந்து எட்டியது. உன் தம்பியின் இரத்தம், கதறல் பூமியிலிருந்து என்னை நோக்கி கூப்பிடுகிறது, முறையிடுகிறது என்றார். காரணம் அது தேவசமூகத்தை எட்டியது. மனிதனுடைய பாவத்தின் அக்கிரமம் இன்றைக்கு தேவசமூகத்தை எட்டுகிறது. அதனால் தான் பூமியில் வாதைகளும், பாடுகளும், உபத்திரவங்களும், தண்டனைகளும் உண்டாகிறது. **வெளி 6:10-ஐ வாசித்துப் பாருங்கள் அவர்கள் பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.** கொலை செய்யப்பட்டு, ஆண்டவருக்காக ஜீவித்தவர்களின் இரத்தம் கூக்குரலிட்டது. அவர்களின் தொகை நிறைவடைய வேண்டும் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரிகளே ஒவ்வொரு மனிதனுடைய புலம்பலும், பெருமூச்சும், வேதனையும் இன்றைக்கு பரலோகத்தில் தேவசமூகத்தில் எட்டுகிறது. இதைத்தான் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சொல்லும்படி மோசேக்குச் சொன்னார். அவர்கள் கூக்குரலும், வேதனைகளும், புலம்பலும் தேவசமூகத்தை எட்டியது. அதை ஜனங்களுக்குச் சொல்ல, வெளிப்படுத்தத்தான் ஆண்டவராகிய தேவன் பூமியில் இறங்கி வந்து மோசேக்குத் தன்னை வெளிப்படுத்தினார். அதே தேவன் இன்றும் உயிரோடிருக்கிறார். யார் அவர் சமூகத்தில் போய் கதறினாலும், மனமுடைந்து அழுதாலும் அவர்கள் ஜெபத்தை, கூப்பிடுதலை கேட்கிறார்

**புலம்பல் 3:31,32,33-ல் ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார், அவர் சஞ்சலப்படுத்தினாலும், தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை.** இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் வேதனை என்ன, பாடுகள் என்ன, உபத்திரவங்கள் என்ன, சஞ்சலம் என்ன, யாரால்? உங்களுக்கு வேதனை, போரட்டம், துக்கம் மனிதர்களால், உடன்பிறந்தவர்களால், கூட இருக்கிறவர்களானாலும் சரி. யாரும் உங்கள் குரலுக்கு, சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லையா? மனமுடைந்து தேவசமூகத்தில் முறையிடுகிறீர்களா? கதறுகிறீர்களா? உங்கள் சத்தம், உங்கள் கதறல் நிச்சயமாகவே இன்றைக்கு தேவசமூகத்தை எட்டும். உங்கள்



கதறுதலின் ஜெபத்திற்கு நிச்சயமாகவே பரலோகத்திலிருந்து பதில் வரும், அற்புதம் நடக்கும். தேவன் அதனிமித்தம் உங்களுக்காக எழுந்தருளுவார். நீதி வழங்குவார். சீக்கிரத்திலே நியாயம் செய்வார். உங்களுக்கு வரவேண்டிய நன்மைகளும், ஆசீர்வாதங்களும் இனி யாராலும் தடுக்க முடியாது. உங்கள் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுவார். அதற்காகத்தான் அவர் உயிரோடிருக்கிறார், உங்கள் விண்ணப்பத்தைக் கேட்கிறார். போகட்டும் யார் யாருடைய கதறலைகேட்டார், எந்தெந்த காரியங்கள் தேவசமூகத்தை எட்டியது. அதற்குத் தேவன் என்ன நியாயம் செய்தார் என்பதைப் பார்ப்போம்.

## நம்முடைய ஜெபங்கள் தேவ சமூகத்தை எட்டுகிறது

உன் ஜெபங்களும், உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்து எட்டினது என்றான். முதலாவது தேவசமூகத்தை எட்டுகிற ஒரு காரியம் என்ன தெரியுமா? ஜெபம் தான். இன்றைக்கு ஒரு மனிதன் செய்கிற தவறு அடுத்த நிமிடமே முழுஉலகத்திற்கும் எட்டி விடுகிறது. காரணம் ஊடகங்கள், மீடியாக்கள் அதை திரும்ப திரும்ப ஒளிபரப்பு செய்து உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் சொல்லி விடுவார்கள். ஆனால் இதைக் காட்டிலும் வேகமாக ஒரு செய்தி தேவசமூகத்தை சென்றடைகிறது அது தேவபிள்ளையின் ஜெபம். பல வேளைகளில் நாம் பண்ணுகிற ஜெபத்தை நாமே மறந்து விடலாம், காரணம் அதற்குப் பதில் வரவில்லை அல்லது கிடைக்கவில்லை என்று. அதனால் நாம் விரக்தியடைந்து இனி மேலா? நமக்கு நடக்கப் போகிறது, கிடைக்கப் போகிறது என்று அந்த ஜெபத்தை விட்டுவிடுவோம், மறந்துவிடுவோம். ஆனால் தேவசமூகத்தில் ஏறெடுத்த எந்த ஜெபமும், எந்த ஒரு காரியமும் நடக்காமல் நிறைவேறாமல், போனதில்லை. அது நிறைவேறியே தீரும். காரணம் நம்முடைய ஜெபங்களும், தருமங்களும் தேவ சமூகத்தை எட்டுகிறது. இதைத்தான்



**லூக்கா 1:13,14-ல் பார்க்கிறோம் தூதன் அவனை நோக்கி சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் என்றார்.** ஏறக்குறைய 50 வருடத்திற்கு முன்பாக சகரியாவும், எலிசபெத்தும் பிள்ளை இல்லாத போது தேவனை நோக்கி அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சி மன்றாடியிருப்பார்கள். இப்படி ஒரு நாள், இரண்டு நாள் அல்ல, மாதக்கணக்கில், வருடங்களாய் தேவனை நோக்கி அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சி ஜெபித்தார்கள். ஏறக்குறைய 50 வருடமாக ஒன்றும் நடக்கவில்லை சோர்ந்து போனார்கள். தேவசித்தம் எதுவானால் என்ன, இனி என்ன நடந்தால் என்ன என்று அமைதலாக, பொறுமையாக இருந்து விட்டார்கள். தேவன் எது செய்தாலும், எப்படி நடத்தினாலும் பரவாயில்லை என்று அமைதலாகிவிட்டார்கள். ஏனென்றால் நாளாகிவிட்டது, பல வருஷங்களும் ஆகிவிட்டது. அவர்கள் ஏறெடுத்த ஜெபத்தை, அவர்கள் கதறிச் சொன்ன வார்த்தைகளை அவர்களே மறந்து விட்டார்கள். ஆனால் தேவன் மறக்கவில்லை. நாம் கதறிச் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் தேவசமூகத்தில் போய் எட்டும். ஒரு நாள் வயதான காலத்தில் சகரியா ஆலயத்தில் ஆசாரிய ஊழியத்தைச் செய்கிறபோது, தூபங்காட்டுகிற போது ஆண்டவர் ஒரு தேவதூதனை அனுப்பி உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் வேண்டுதல் கேட்கப்பட்டது என்றார். என்ன வேண்டுதல்? நீ பிள்ளையில்லாமல் வெறுமையாய் இருக்கிறாய் அல்லவா அந்த வெறுமையைப் போக்க, உனக்கு அற்புதத்தைச் செய்ய இன்றைக்கு இறங்கி வந்தேன். குறித்த காலத்திலே, உற்பவ காலத்திலே எலிசபெத் ஒரு மகனைப் பெறுவாள். அவன் கர்த்தருக்கு முன்பாக நடப்பான். கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவான் என்றார். காரணம் சகரியாவும், எலிசபெத்தும் ஏறெடுத்த ஜெபம் பூரணமாக, நிறைவாக அவ்வளவு நாள் ஜெபிக்க

வேண்டியதாயிருந்தது. சில ஜெபங்களுக்கு உடனே பதில் வந்துவிடும், அற்புதமும் நடந்துவிடும். ஆனால் சில ஜெபங்களுக்கு பதில் தாமதமாகும். காரணம் அதனுடைய நிறைவு, பரிபூரணம் ஆக தாமதமாகலாம்.
**இதைத்தான் வெளி 6:10-ல் உங்களைப் போல இரத்த சாட்சிகளாய் மரிக்க வேண்டிய உடன்ஊழியர்களின் தொகை நிறைவாகவில்லை, பரிபூரணப்படவில்லை என்றார்.** இவர்கள் ஜெபங்கள் தேவசமூகத்தை எட்ட அத்தனை வருஷம் தேவைப்பட்டது. இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற உங்கள் ஜெபத்திற்கும் உடனே பதில் வரவில்லை என்றால் மனம் தளர வேண்டாம், மனம் பதற வேண்டாம்.



அது தாமதித்தாலும் நிறைவேறும். **ஆபகூக் 2:3 சொல்லுகிறது குறித்த காலத்திற்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது, முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது, அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு, அது நிச்சயமாய் வரும். அது தாமதிப்பதில்லை என்று சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி** ஆண்டவர் ஏற்ற காலத்திலே, முன்குறித்த காலத்திலே அவர்கள் விண்ணப்பத்திற்கு இறங்கி, ஜெபத்திற்குப் பதில் கொடுத்தவர் இன்றைக்கு உங்கள் ஜெபத்திற்கும் பதில் கொடுப்பார். தாமதித்தாலும் அது நிறைவேறும். வருஷங்கள் கடந்தாலும், சூழ்நிலைகள் விரோதமாக இருந்தாலும் கர்த்தருடைய கரம் குறுகிப் போகவில்லை. அவர்கள் ஜெபத்திற்கு பதிலை அற்புதமாய் கொண்டு வந்தது, அந்த ஜெபத்தின் பூரணத்தை அவர்கள் அனுபவித்தார்கள்.

## கொர்நேலியுவின் ஜெபம்

அவன் ராணுவத்தில் பணிபுரிந்த, உயர் பதவியில் இருந்த, தேவனுக்குப் பயந்து தனக்கு கீழ் பணியாற்றுகிற யாவரையும் மதித்து, நேசித்து அன்பு செய்தவர். இவருக்கு தேவன், இயேசு என்றால் யார் என்றே தெரியாது. கடவுள் யார் என்று தெரியாமலே அவர் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். தானம், தர்மம் பண்ணிக் கொண்டிருந்தார். பக்தியாய் வாழ்ந்தவர். வேதம் சொல்லுகிறது **சங் 4:3-ல் பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காக தெரிந்து கொண்டார்.** இந்த பக்தியுள்ளவனுக்கு கர்த்தர் தம்மை வெளிப்படுத்த சித்தமானார். அவர் தம்மை வெளிப்படுத்தாமல் யாரும் தேவனை அறிந்து கொள்ள முடியாது. இப்படி அவர் தேவன் யார் என்று அறியாமலே தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்த போது கர்த்தர் ஒரு தேவதூதனை அனுப்பி தம்மை வெளிப்படுத்தினார். **உன் ஜெபங்களும், தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது என்றார் அப் 10:4 அப்படி சொல்லுகிறது.** எத்தனையோ மாதங்கள், எத்தனையோ வருஷங்கள் அவர் ஏறெடுத்த ஜெபங்கள் இன்றைக்கு தேவசமூகத்தை எட்டினது. அந்த ஜெபம் நிறைவடைந்து பரலோகத்தில் எட்டினது, அப்படி நிறைவான போது ஆண்டவராகிய தேவன் அந்த ஜெபத்திற்குப் பதில் கொடுக்க ஆரம்பித்தார். நடந்தது என்ன கொர்நேலியுவும், அவன் வீட்டாரும் இயேசுவை அறியவும், அவன் குடும்பத்தார்களும், உறவினர்களும் இரட்சிக்கப்படவும் கர்த்தர் தம்முடைய வார்த்தையை அனுப்பவும், தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தவும் தேவன் பேதுருவை அவர்களிடத்திற்கு அனுப்பினார் அப்படி பேதுரு போய் பிரசங்கித்த போது

தேவனுடைய வார்த்தைகளைக் கேட்ட அத்தனை பேர் மீதும் பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் இறங்கினார். கொர்நேலியுவின் ஜெபத்தின் பூரண நிறைவினால் ஆண்டவராகிய இயேசுவையும், அவருடைய பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தையும் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இன்றைக்கு இந்த பூமியில் தேவனுடைய பிள்ளைகளின் ஜெபங்கள் பரிபூரணமடைய வேண்டும். அதனுடைய நிறைவு தேவ சமூகத்தை எட்ட வேண்டும். அதற்குத்தான் நாம் இடைவிடாமல், சோர்ந்துபோகாமல் ஜெபிக்கிறோம். அதனால் தான் ஆண்டவராகிய இயேசு, அவருடைய பிள்ளைகளைப் பார்த்துலூக்கா 18:1-ல் சோர்ந்து போகாமல், மனம் தளராமல் ஜெபிக்க வேண்டும் என்று பல உவமைகளைச் சொல்லி யிருக்கிறார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே உங்களுடைய பக்தி, பரிசுத்தம், விசுவாசம், உங்களுடைய ஜெபங்கள் பூரணமடைந்து அது தேவசமூகத்தை எட்டுவதாய் இருக்க வேண்டும். பாதியிலே நின்று விட்ட ஜெபங்களாய், பாதியிலே முடிந்து விட்ட ஜெபங்களாய், பூரணமாகாத ஜெபங்களாய் இருந்துவிடக் கூடாது. அதற்குத் தான் தேவன் எல்லாவற்றிற்கும் ஒரு பூரணத்தை வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஜெபங்கள் மாத்திரம், கதறல்கள் மாத்திரம், பெருமூச்சு மாத்திரம் தேவ சமூகத்தை எட்டி, நம்மைத் தேவனுக்கு முன்பாக நிறுத்தி குற்றமில்லாதவர்களாக, பரிசுத்தமானவர்களாக பூரணராக நிலைநிறுத்தி நம்மை தேவசமூகத்தில் உலாவுகிறவர்களாக மாற்றும். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்கள் ஜெபங்கள் தேவசமூகத்தில் எட்டுவதாக மாற்றுவாராக.



## பாவத்தின் நிறைவு

**நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி. அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது. யோனா 1:2.** நினிவேயில் இருந்த மக்கள் முரட்டாட்டம் உள்ளவர்கள். யாருக்கும் கட்டுப்படாதவர்கள், வணங்கா கழுத்துள்ளவர்கள், தெய்வ பயமற்றவர்கள் இவர்களுடைய அக்கிரமம், பாவம், கூக்குரல் விண்ணைத்தொட்டது, தேவசமூகத்தை எட்டியது. இனி பூமியில் யாராக இருந்தாலும் சரி, எந்த ராஜாவாக இருந்தாலும், அரசாங்கமாக இருந்தாலும் அவர்கள் செய்கிற நன்மைகள் அல்லது தீமைகள் தேவசமூகத்தை எட்டிவிடும். அதைத்தான் இப்பொழுது உலகத்தில் பார்க்கிறோம். ஓட்டுப்போட்டு நல்லவர் என்று தெரிந்தெடுத்த ராஜாவையே ஜனங்கள் ஆட்சியை விட்டு, நாட்டை விட்டு துரத்துகிறார்கள். தேவனுடைய நீதி வெளிப்பட ஆரம்பித்து, இனி தீங்கு செய்கிற, அக்கிரமம் செய்கிற எந்த மனிதனுக்கும் சமாதானம் இருக்காது. **ரோமர் 2:9-ல் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும், வியாகுலமும் உண்டாகும் என்று சொல்லப்பட்டுள்ளது.** காரணம் பாவத்தின் நிறைவு, அக்கிரமத்தின் நிறைவு **பூமியிலே வெளிப்பட ஆரம்பித்து விட்டது. ஆதி 18:20,21 வசனத்தின்படி பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப் போய் என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ**

**என்று பார்த்து அறிவேன் என்றார்.**

அந்த அக்கிரமம், பாவம் நிறைவடைந்து விட்டதா, அது பரிபூரணம் அடைந்து விட்டதா என்று பார்க்க கர்த்தர் சோதோம் கொமோராவுக்கு தேவ தூதர்களை அனுப்பினார். இன்றைக்கு உலகில் மனிதர்களுடைய அக்கிரமமும், பாவமும், அதன் நிறைவும் தேவசமூகத்தை எட்டுகிறதாயிருக்கும். ஆகவே தேவன் பூமியிலுள்ள மனுகுலத்தை எச்சரித்துக் கொண்டிருக்கிறார். மனம் திரும்ப வாய்ப்பு கொடுத்திருக்கிறார். **2 பேதுரு 3:9-ல் தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.** எச்சரிக்கிறார், கண்டிக்கிறார். சிட்சைகளுக்கு உட்படுத்துகிறார்.. மனம் திரும்ப தவணை கொடுக்கிறார். பாவத்தை விட்டு ஓட வாய்ப்புக் கொடுக்கிறார். அதனால் தான் பூமியில் இயற்கை சீற்றங்களும், கொள்ளை நோய்களும், எதிர்பாராத சேதங்களும் உண்டாகி முழுமனுக்குலத்தையும் எச்சரிக்கிறது. **அப் 8:22-ல் ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள். ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்** என்று பேதுரு மந்திரவாதியாகிய சீமோனை எச்சரித்தார். உடனே அவர் தன்னைத் தாழ்த்தி நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்ளுங்கள் என்று தேவதண்டனைக்குத் தப்பினான், தேவகோபத்திற்குத் தப்பினான். ஆகவே தான் அவ்வப்போது மனிதனை எச்சரித்ததால் பாவத்தின் அளவை, பாவத்தின் நிறைவை குறைத்தார்கள் என்று தேவன் சொல்லுகிறார். **ஆதி 15:16-ஐ பாருங்கள் ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை என்றார்.** அதனால் தேவன் நம்மை விட்டு வைத்து, பொல்லாத வழிகளை விட்டு மனம் திரும்பி அவரை ஏற்றுக் கொள்ள வாய்ப்புக் கொடுக்கிறார். நாம் இன்னும் நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்தி மனம் திரும்பாமல், பொல்லாத வழிகளை விட்டுவிடாமல் இருக்கும் போது தேவ கோபத்திற்கும், தண்டனைக்கும் தப்பமுடியாது. **1 தீமோ 5:24-ல் சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும், சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்.** குறித்த காலத்திற்கு முன்பே, பூமியில் அவனுக்கு நியமிக்கப்பட்ட காலத்திற்கு முன்பே சிலர் பரிதாபமாய் மரித்து விடுகிறார்கள். தேவ கோபத்திற்கு உள்ளாகி விடுகிறார்கள். காரணம் **பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும் என்று வேதம் யாக்கோபு 1:15-ல் சொல்லுகிறது.** இதை உணராமல், அறியாமல் இன்னும் கற்பனை உலகில், மாயை உலகில் மனிதர்கள் இவ்வுலகமே கெதி என்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள் **வெளி 18:5,6-ல் அவர்களுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவர்களுடைய அநியாயங்களை தேவன் நினைவு கூர்ந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது.** இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே உன்னுடைய எந்த காரியங்கள் தேவசமூகத்தில் எட்டுகிறதாய் இருக்கிறது உன் பாவமா? உன் ஜெபமா? உன் அக்கிரமங்களா அல்லது உன் நீதியா, உன் தீமையா அல்லது நீ செய்கிற நற்கிரியைகளா? எது தேவ சமூகத்தை எட்டுகிறதாய் இருக்கிறது. எது தேவசமூகத்தைப் பூரணப்படுத்தியிருக்கிறது. இன்றைக்கு அவைகளின் அளவைப் பார்க்க தேவன் இறங்கி வரப்போகிறார். உங்கள் தீமையின் அளவைக் குறைத்து, பாவத்தின் அளவைக் குறைத்து பரிசுத்தத்தின் அளவை, ஜெபத்தின் அளவை கூட்டுங்கள். அப்பொழுது கிருபையானது உங்களோடிருக்கும், தேவகரத்தினாலே பாதுகாக்கப்படுவீர்கள். **1 தெச 2:16-ல் இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள். அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது** என்ற வார்த்தையின்படி தேவன் அவர்களுக்கு நம்மை தப்புவித்து, பாதுகாத்து அவருடைய செட்டையின் கீழ் அடைக்கலம் கொடுப்பாராக. உங்களுடைய பாவம் அல்ல பரிசுத்தமும், ஜெபமும் தேவசமூகத்தை எட்டவும், அதன் நிறைவு மாத்திரமே தேவ சமூகத்திற்குப் போகவும் கிருபை செய்வாராக.


ஆசீர்வாதமான கோவை
உபவாச ஜெபம்
ஜூலை
1
காலை 10.00
2.00 வரை
இடம்
YMCA ஹால், தலைமை தபால்
நிலையம் அருகில், கோவை
தொடர்புக்கு – 90879 89149


மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில்
எழுப்புதல் உபவாச
ஜெபம்
Sis.Kala VincentRaj
Bro.L.Vincentraj
Bro. J. Stephen
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை
ஜுன்
17
சனிக்கிழமை
9:30am to 2:00pm

# உமது சமூகத்தில் ஒரே நாள் நல்லது



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பான சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள். சங்கீதக்காரன் தாவீது ஆண்டவரை முழு இருதயத்தோடு தேடினவன். சங்கீதம் 84 முழுவதும் அதை பார்க்கலாம். சேனைகளின் கர்த்தாவே உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள். என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது. என் இருதயமும், என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கி கெம்பீர சத்தமிடுகிறது. என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்கு தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே. உம்முடைய வீட்டில் வாசமாயிருப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக் கொண்டிருப்பார்கள் என்று எவ்வளவாய் தேவசமூகத்தை, தேவ ஆலயத்தை வாஞ்சித்து கதறுகிறான். சங் 84:10-ல் ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது. ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன் என்கிறான். தாவீது வனாந்திரங்களில் தங்கினவன். ஆடுகளோடு ஆடாக படுத்துக்கிடந்தவன். பகலின் வெயில், இரவில் குளிர், கொடிய மிருகங்களின் அச்சுறுத்தல் இவைகளைக் கடந்தவன். பலவிதமான யுத்தங்களைச் சந்தித்தவன். அடிமட்டத்திலிருந்து உயர்ந்தவன் அரண்மனை வாழ்வில் களித்தவன். பல மனைவிகள், சேவகர்கள், கேதுரு மரத்திலான வீடு ஒரு குறையின்றி

வாழ்ந்தவன். பல விதமான மேடு, பள்ளங்கள் எல்லாம் சந்தித்தவன். அவன் எத்தனையோ இடத்தில் நான் இருந்திருக்கிறேன். எத்தனையோ சூழலில் வாழ்ந்திருக்கிறேன். நான் வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்ந்ததை விட, வாழ்வதைவிட உம் இல்லத்தில், உம் சமூகத்தில் இருக்கிற அந்த ஒரே நாள் நல்லது என்கிறான். தாவீது எவ்வளவாய் ஆண்டவரின் சமூகத்தையே தெரிந்து கொள்கிறான். அதனால் தான் அவனை ஆண்டவர், தாவீது என் இருதயத்துக்கு ஏற்றவன் என்கிறார் அப் 13:22 அப்படிச் சொல்கிறது. அவர் சமூகத்தை கிட்டிச் சேர்ந்த, நாடின ஒருவரையும் ஆண்டவர் பாராட்டத் தவறவில்லை. ஆயக்காரன் எப்படி தன்னைக் கிட்டி சேர்ந்தான் என்றும் இவன்தான் எனக்கு ஏற்றவனாய் இருக்கிறான் என்றார்.



பரிமளத்தைலத்தை உடைத்து ஊற்றிய மரியாள் ஆண்டவரின் பாதத்தை கிட்டிச்சேர்ந்த போது இவள் என்னிடத்தில் நற்கிரியையை செய்திருக்கிறாளே என்றார். அவர் பாதத்தில் உட்கார்ந்து வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மரியாளை இவள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் என்கிறார். இப்படி ஆண்டவரின் சமூகத்தை வாஞ்சித்த ஒவ்வொருவரையும் ஆண்டவர் மேன்மைப்படுத்தினார். இந்தச் செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரியே, நீங்களும் கூட ஒவ்வொரு நாளும் வேறிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதை விட உம் சமூகத்தில் ஒரே நாள் இருப்பது மேலானது என்று அவர் சமூகத்தை தெரிந்துகொள்வீர்களா? அவர் சமூகத்தில் செல்லும் அந்த ஒரே நாளில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

## அக்கிரமம் நீக்கப்படுகிறது

கர்த்தர் சகரியா தீர்க்கதரிசிக்கு ஒரு காரியத்தை காண்பிக்கிறார். பிரதான ஆசாரியனாயிருந்த யோசுவா கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நிற்கிறார். சாத்தான் அவரை குற்றப்படுத்தும் பொருட்டு அவரது வலது பக்கத்திலே நிற்கிறான். அப்பொழுது கர்த்தர் சாத்தானைக் கடிந்து கொண்டு, அவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளியல்லவா? என்கிறார். அப்பொழுது யோசுவாவோவெனில் அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான். அப்பொழுது அவனது அழுக்கு வஸ்திரங்களை களைந்துபோட்டு அவனை நோக்கி பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் என்றார். தலையில் சுத்தமான பாகை வைக்கப்பட்டு சிறந்த வஸ்திரங்கள் தரிப்பிக்கப்பட்டு ஆண்டவருக்கு முன்பாக நிற்கும் பிரதான ஆசாரியன் தான் அவன்! ஆனால் அவனிடத்தில் அழுக்கு வஸ்திரம் காணப்பட்டது. **யோபு 25:5-ல் நட்சத்திரங்களும் அவர் பார்வைக்கு சுத்தமானவைகளல்ல என்று வாசிக்கிறோம்.** பொல்லாத உலகத்தில் வாழ்கிற நாம், ஒவ்வொரு நாளும் கறையில்லாமல் வாழ, குறைகள் நிறைந்த நாம் அவர் சமூகத்தில் இந்த ஒரு நாள் நல்லது என்று அனுதினமும் சொல்ல வேண்டும். அப்போது யோசுவாவை சுத்திகரித்தவர் நம்மையும் சுத்திகரிப்பார். அக்கினியிலிருந்து எடுக்கப்பட்ட கொள்ளியைப் பாருங்கள்! எரிந்து கொண்டிருக்கும் அக்கினியில் இன்னும் கொஞ்ச நேரம் எரிந்துவிட்டால் சாம்பலாகிவிடும். ஆனால் சாம்பலாகும் முன்னே, அக்கினிக்குள் இருந்து தூக்கியெடுக்கப்பட்ட கரிக்கட்டை கொள்ளியைப் போல நாமும் அழிந்து போவதற்கு முன்னே ஆண்டவர் தூக்கியெடுக்கிறார். சகரியா 3:9-ல் யோசுவாவுக்கு

முன்பாக ஒரு கல் வைக்கப்படுகிறது. அந்த கல் கிறிஸ்துவே. அவர் இந்த தேசத்தின் அக்கிரமத்தை ஒரே நாளிலே நீக்கிப்போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். நாம் கர்த்தருக்கு முன்பாக நின்றால், அவர் சமூகத்தில் இந்த ஒரே நாள் நல்லது என்று வாஞ்சித்தால் அந்த ஒரே நாளில் நம்முடைய அக்கிரமங்கள் நீக்கப்படுகிறது. நம் அக்கிரமங்கள் நீக்கப்பட்டு நாம் சுத்திகரிக்கப்பட்டால் சகரியா 3:7-ல் நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், இங்கே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்கு கட்டளையிடுவேன். என் ஆலயத்தில் என் பிரகாரத்தை காத்து, நியாயம் விசாரித்து இங்கே நீ என்னோடு சஞ்சரிக்கலாம் என்பதாக ஆண்டவர் சொல்கிறார். எத்தனை பாக்கியம் பாருங்கள்! தாவீது ஆண்டவரே, உமது பீடத்தில் குருவிகளுக்கு கூடும் இருக்கிறதே! எனக்கும் தாங்க என்று ஏங்கி ஜெபிக்கிறான். ஆண்டவர் உன் அக்கிரமத்தை நீக்கி என்னோடு உலாவ இடம் கட்டளையிடுவேன் என்கிறார். எப்போது? நாம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு சுத்திகரிக்கப் பட்டு, அவர் வழிகளில் நடக்க நம்மை அர்ப்பணித்து, சத்துரு நுழையாமல் நமது கண்ணை, வாயை, செவியை இருதயத்தை, சிந்தையை காத்தால் நாம் தேவனோடு உலாவ இடம் கட்டளையிடுவார். இன்றே நாம் ஆண்டவருக்கு முன்னால் அவரது சமூகத்தில் ஒரு நாள் வருவோமா?




## கோல் துளிர்த்தது

நம் ஆண்டவர் பரிசுத்தர். தீமையை பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன். ஒரு தீமை கூட இல்லாமல் நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். அவ்விதமாய் பரிசுத்தத்தைப் பற்றி பேசின போது சிலர் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து, சபையாரெல்லாம் பரிசுத்தமானவர்கள், நீங்கள் ஏன் சும்மா எப்பப்பார்த்தாலும் பரிசுத்தம், பரிசுத்தம் என்று பேசி கர்த்தருக்கு மேலாக உங்களை உயர்த்துகிறீர்கள். எங்கள் மேல் நீ துரைத்தனம் பண்ணுவாயோ? என்று ஆரோனுக்கும், மோசேக்கும் விரோதமாக எழும்பினார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் வந்தது. ஆரோன் தூபக்கலசத்தை எடுத்துக் கொண்டு போய் தேவனிடத்தில் மன்றாடினபோது அந்த வாதை நிறுத்தப்பட்டது. எண் 17:4,5-ல் நீ ஒவ்வொரு வம்சத்திற்கும் ஒரு தலைவனின் பெயரை எழுதிய கோலை ஆசரிப்பு கூடாரத்திலே நான் உங்களைச் சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சிப் பெட்டிக்கு முன்பாக வைக்கக்கடவாய் அப்பொழுது நான் தெரிந்து கொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும். முறுமுறுக்கிறவனுடைய முறுமுறுப்பை ஒழியப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார். அப்படியே எல்லாக் கோல்களும் தேவன் சந்திக்கும் ஸ்தானமாகிய அவர் சமூகத்தில் வைக்கப்பட்டது. 8-ஆம் வசனம் சொல்கிறது மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது. அது துளிர்விட்டு பூப்பூத்து, வாதுமை பழங்களைக் கொடுத்தது. ஒரே நாளில் துளிர்க்கலாம். ஆனால் தேவன் தெரிந்து கொண்டவனின் கோல் துளிர்த்து, பூத்து பழங்களைக் கொண்டு வந்தது. இது முடியுமா? தேவனால் முடிந்ததே!. சகோதரியே, நீங்களும் ஆண்டவருக்கென்று பரிசுத்தமாய் வாழ உங்களை அர்ப்பணித்திருக்கும்போது அவர் சமூகத்தில் இருக்கிற உங்கள் வாழ்வை, பட்டமரம் போல, ஒரு கோலைப் போல இருக்கும் வாழ்வை ஒரே நாளில் துளிர்க்கவும், பூக்கவும், பழங்களைத் தரவும் தக்கதான ஆசீர்வாத வாழ்வை தேவன் காணச் செய்வார். முறுமுறுத்து, பரிசுத்தத்தை பகைக்கிற கூட்டத்தோடு அல்ல தேவனோடு, பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம் அடைய அவர் சமூகத்தில் இந்த ஒரே நாள் நல்லது என்று

# அழிவு மாற்றப்படுகிறது


ஆமானுக்கு முன்பாக எழுந்திருக்காத, மரியாதை செய்யாத மொர்தெகாய் நிமித்தம் அவன் இனத்தையே அழிக்க ஆமான் திட்டமிடுகிறான். ராஜ அனுமதியும் பெற்று முழு யூத இனத்தையே ஆதார் மாதமான பன்னிரெண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர், பெரியோர், குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும், அழித்து கொன்று நிர்மூலமாக்கவும் அவர்களை கொள்ளையிடவும் அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக் கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது. எஸ்தர் 3:13



ஆனால் எஸ்தரோ இதை கேள்விப்பட்டு ராஜ சமூகத்தில் நின்றாள். என் ஜனம் அழியக்கூடாது. அவள் ராஜாவிடத்தில் பேசினபடியால் ராஜா இரங்கி, எஸ்தர் மேல் வைத்த தயவினால் உனக்கு இஷ்டமானபடி எழுதி ராஜாவின் நாமத்தினால், அவர் மோதிரத்தால் முத்திரை போட்டு அனுப்புங்கள். அதை செல்லாமற் போகப்பண்ண ஒருவராலும் முடியாது என்றான். அப்படியே எஸ்தரும், மொர்தெகாயும் எந்தெந்த நாடுகளுக்கு யூத இனம் அழிக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே ஆமானால் அனுப்பப்பட்டிருந்ததோ அந்த எல்லா நாடுகளிலும் ஆதார் மாதம் என்கிற பன்னிரெண்டாம் மாதம் பதின்மூன்றாம் தேதியாகிய அந்த ஒரே நாளிலே அந்தந்த பட்டணத்திலிருக்கிற யூதர் ஒன்றாய் சேர்ந்து தங்கள் பிராணனை காப்பாற்றவும், தங்கள் விரோதிகளை அழித்து கொன்று நிர்மூலமாக்கவும், அவர்கள் உடைமைகளை கொள்ளையிடவும் ராஜா யூதருக்கு கட்டளையிட்டார் என்று எழுதி அனுப்பினார்கள். எந்த நாளில் அழியப்போகிறோம், அவ்வளவுதான் என்று நினைத்தார்களோ அதே நாளில் எதிரிகள் அழிந்தார்கள். இவர்களோ வாழ்ந்து சுகித்தார்கள். கலங்கின சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. காரணம் எஸ்தர் அவர் சமூகத்தில் நின்ற ஒரே நாள். தீர்ப்பை மாற்றி ஒரே நாளில் காரியம் மாறுதலாய் முடிந்தது. சகோதரியே தைரியமாய் கிருபாசனத்தண்டை சேருங்கள். ஆமான் எவ்வளவு கொட்டங்களை கொண்டு வந்தாலும் பயப்படாமல் ராஜ சமூகத்தில் போய் உம் சமூகத்தில் இந்த ஒரு நாள் நல்லது என்று நில்லுங்கள். அவர் சமூகத்தில் நீங்கள் ஏறெடுக்கும் ஜெபம் மேலானது. அழிவு நியமிக்கப்பட்ட ஒன்றா யிருந்தாலும், அந்த அழிவை, தீமையை, நிந்தையை, அவமானத்தை மாற்றக்கூடியது ஜெபம். அந்தபக்கம் எதிரிகள். இந்தப்பக்கம் யூதர்கள் ஒரே நாளில் அவர்கள் அழிப்பார்கள் என்றிருந்த போது, யூதர்கள் அவர்களை அழித்து விட்டார்கள். 1 இரா 20:29-ல் இஸ்ரவேலரும், சீரியரும் ஏழுநாளளவும் ஒருவர் முகத்துக்கு எதிராய் ஒருவர் முகமுகமாய் பாளயமிறங்கி இருந்தார்கள். கடைசியாய் யுத்தம் கலந்த இஸ்ரவேல் புத்திரர் ஒரே நாளிலே சீரியரின் லட்சம் காலாட்களை மடங்கடித்தார்கள். சகோதரியே, உங்கள் முகத்திற்கு முன்பாக பாளயமிறங்கி இருக்கிற எதிரிகளுக்கு பயப்படாதிருங்கள். இயேசுவின் சமூகத்தில் உங்களை தாழ்த்தி நில்லுங்கள் நீங்கள் முறியடிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக நீங்கள் அவர்களை முறியடிப்பீர்கள்.

# எழும்புதல் ஏற்படுகிறது

எசேக்கியேல் தீர்க்கதரிசி எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்குகளில் நின்றபோது நம்பிக்கையே இல்லை. இது உயிரடையுமா? எனக்கு தெரியவில்லை தேவனே, நீர் அறிவீர் என்றார். ஆனால் பலமும் அல்ல பராக்கிரமும் அல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்.
சக 4:6-ன் படி ஆவியானவர் இறங்கி வருகிறபோது எல்லா எலும்புகளும் ஜீவன் பெற்று காலுன்றி நின்றது. நாங்கள் இஸ்ரேல் பிரயாணம் சென்றபோது எகிப்தில் சீனாய் மலை அடிவாரத்தில் தங்கினோம். அப்போது நான் ஆண்டவரே, எகிப்து தேசத்தில் வறுமையில் ஏராளமான பேர் இருக்கிறார்கள். இஸ்ரேலில் நீர் வந்திருந்தும் அதை அறியாத மக்கள் எவ்-வளவோ பேர் இருக்கிறார்கள். உம்மை அறியாமல் எத்தனை நாடுகள், எத்தனை மக்கள் இருக்கிறார்கள். ஒரே நாளில் எல்லாரையும் நீர் சந்தித்து இரட்சிக்கலாமே எறு மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் **ஏசா 66:8-ல் ஒரு தேசத்துக்கு ஒரே நாளில் பிள்ளைப்பேறு வருமோ? ஒரு ஜாதி ஒருமிக்க பிறக்குமோ? சீயோனோவெனில் ஒருமிக்க வேதனைப்பட்டும் தன் குமாரரைப்** பெற்றும் இருக்கிறது என்ற வசனத்தை ஆண்டவர் ஞாபகப்படுத்தினார். நான் ஒரே நாளில் இரட்சிக்க ஆயத்தம். ஆனால் பிரசவ வேதனைப்படத்தான் ஆளில்லை என்பதாக ஆண்டவர் பேசினார். ஆண்டவரே, என்னை ஜெப ஆவியால், ஆத்தும பாரத்தால் நிரப்பும். நான் வேதனைப்பட்டு குமாரர்களை, குமாரத்திகளை பிறப்பிக்கட்டும் என்று சொன்னேன். வரப்போகும் எழுப்புதல் ஆவியானவரால், சீயோனின் பிரசவ வேதனையினால் ஒருமிக்க ஒரே நாளில் தேசங்கள் பிறப்பிக்கப்போகிறது. மந்தை மந்தையாய், கூட்டங்கூட்டமாய் இயேசுவண்டை ஜனங்கள் ஓடி வரப்போகிறார்கள். அதற்கு நீங்களும் நானும் அவர் சமூகத்தில் இந்த ஒரேநாள் நல்லது என்று நின்று கொள்ள வேண்டும். வீணாய் எங்கு, எதில் நம் நேரம் போகிறதோ அதிலிருந்து நேரத்தை பிடுங்கி எடுத்து ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைக் காட்டிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ள வேண்டும் சங்கீதக்காரன் சொன்னது போல அவரோடு இசைந்து கொள்ளுங்கள். அக்கிரமம் நீக்கப்படும், சுகவாழ்வு துளிர்க்கும், தேசங்கள் மாறும், மாபெரும் ஆசீர்வாதம் வரும், என் ஆண்டவரின் மாறாத பிரசன்னம் உங்களோடு கூடவே இருப்பதாக.



23 YEAR

ஸ்தோத்திர கூட்டம்

# ஆயத்தமாவோம்















தேவனுடைய பெரிதான கிருபையினால் மே மாதம் 1-ஆம் தேதியன்று நமது வானத்தின் வாசல் ஜெபமையத்தில் வைத்து 23-ஆம் ஆண்டு ஸ்தோத்திரக்கூட்டம் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற்றது. நம் தேசத்தின் பல பகுதிகளிலிருந்து திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள். நம் சகோதரி கலாவின்சென்ட்ராஜ் அவர்கள் பாடல்கள் மூலம் ஜனங்களை தேவ பிரசன்னத்திற்குள் நடத்தினார்கள். நம் சகோதரர் வின்செென்ட்ராஜ் அவர்கள் நடத்திய ஆராதனை மூலம் தேவ மகிமையினால் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையைப் பெற்றுச் சென்றார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்தினார். இந்த கடைசி காலங்களில் நாம் என்ன செய்ய வேண்டும், எப்படி செயல்பட வேண்டும், எப்படி கர்த்தருக்காக வைராக்கியமாக நிற்க வேண்டும் என்பதை தெளிவாகவும், விளக்கமாகவும் கருத்தாய் நமக்குப் போதித்தார். இறுதி ஜெபவேளையில் அடிக்கப்பட்ட வண்ணமாக ஆட்டுக்குட்டியானவர் வானத்தின் வாசல் ஜெபமையத்தில் எழுந்தருளினார். அவருடைய இரத்தத்தினால் ஜனங்களை தூய்மைப்படுத்தி, அவர்களை தமக்கென்று தெரிந்தெடுத்தார். ஜனங்களை தேவனுடைய வார்த்தையினாலும், வல்லமையினாலும் நிரப்பினார். வந்திருந்த மக்கள் அனைவரும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும், பசியோடு செல்லாதவாரு ஆசீர்வாதமான உணவு பரிமாறப்பட்டு சரீர ஆசீர்வாதம் ஆக இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றனர். இந்த ஊழியம் தேவ நாமம் மகிமைப்பட சிறப்பாக நடத்தி தந்த தேவாதி தேவனுக்கும், இதற்காக உழைத்த, ஜெபித்த, பணத்தாலும், பொருளாலும் தாங்கினவர்களுக்கும், ஜெபத்தோடு, ஒருமனமாக செயல்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் அனைவருக்கு இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் சார்பாக நன்றி.



மே-1 2023



# இயேசு உன்னை நேசிக்கிறார்

*சகோதரி. பிரேமாடேவிட்*


**நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோமர் 5:8**

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி தங்கைகளே, தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்து அன்பு என்றால் என்னவென்று நமக்கு விளங்கப்பண்ணின (1 யோவா 4:16) நம்முடைய ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நியூயார்க்கில் வாலிபர்கள் இளம் வயதிலேயே போதைப் பொருளுக்கு அடிமையாகி, போதைப்பொருள் வாங்க பணம் தேவைப்படும் போது கொள்ளையடிப்பது, அதைத் தடுப்பவர்களை கொலை செய்வது போன்ற பயங்கரமான பாவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு சுவிசேஷம் சொல்ல டேவிட் வில்கர்சன் என்ற ஒரு போதகர் சென்றார். அவர் நிக்கி குரூஸ் என்ற கொள்ளைக் கூட்டத் தலைவனை சந்தித்தார். இந்த நிக்கி சிறுவயதிலேயே பெற்றோர்களால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டிருந்தான். அன்பு என்றால் என்ன என்றே அறியாதவனாக இருந்தான். ஆகவே அவன் வளர்ந்த போது ஒரு முடிவுக்கு வந்தான். எனக்கு என்ன தீமை என் பெற்றோர் செய்தார்களோ, அதையே நான் மற்றவர்களுக்குச் செய்யப் போகிறேன் என்று அநேக தீமைகளை செய்தான். அவன் உள்ளத்திலோ சமாதானம் இல்லை. டேவிட் வில்கர்சன் மிகவும் துணிச்சலோடு அவன் இருக்கும் இடத்திற்குச் சென்றார். அவனைப் பார்த்து **இயேசு உன்னை நேசிக்கிறார், Jesus loves you** என்றார் நிக்கி அவரை மிகவும் திட்டி,

அவர் முகத்தில் அடித்தான். ஆனால் அவர் சொன்ன பதில் அவன் வாழ்க்கையை மாற்றி போட்டது. அவர் சொன்னார் நீ என்னை 1000 துண்டுகளாக வெட்டி தெருவில் போடலாம், ஆனால் அந்த ஒவ்வொரு துண்டும் சொல்லும் இயேசு உன்னை நேசிக்கிறார் என்று. அதுதான் முதன் முறையாக அன்பு, நேசம் என்ற வார்த்தையை நிக்கி கேட்டது. அவன் இருதயத்தை அது தொட்டது. இரண்டு வாரங்களாக அவனால் தூங்க முடியவில்லை. பின்பு டேவிட் வில்கர்சன் நடத்தின கூட்டத்தில் அவனும், அவன் கூட்டாளிகளும் இரட்சிக்கப்-பட்டு மனம் திரும்பினார்கள். இயேசுவின் சிலுவை அன்பு அவனை மாற்றியது. அவன் மனக்கண்கள் திறந்தது. நிக்கி சொன்னான் இயேசு எனக்காக மரித்தார் என்பதை உணர்ந்தேன். இந்தப் பாவிக்காக ஒரு நீதிமான் மரித்தார். என்னையும் நேசித்ததால் தான் இயேசு சிலுவையில் தொங்கினார் என்பதை அறிந்தேன் என் வாழ்க்கையில் முதல் முறையாக நான் உம்மை நேசிக்கிறேன் இயேசுவே என்று நிக்கி சொன்னான். எவ்வளவு பெரிய அற்புதம் பாருங்கள். இந்த செய்தியை வாசிக்கின்ற அன்பான வாலிபத்தம்பி, தங்கையே நிக்கியைப் போலவே நீங்களும் போதைப் பொருளுக்கோ, குடிபழக்கத்திற்கோ, செல்போனுக்கோ வேறு எந்த காரியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறீர்கள்? அந்த காரியத்தைச் செய்வதற்காக கொலை, கொள்ளை வரை செல்ல துணிந்து விட்டீர்களா? ஒரு பொய்யை மறைக்க இன்னொரு பொய், ஒரு தப்பை மறைக்க இன்னொரு தப்பு என்ற கண்ணியில் சிக்கி இருக்கிறீர்களா? பெற்றோரோ, பெரியவரோ, ஆசிரியரோ உங்களை கண்டிப்பதோ, தண்டிப்பதோ உங்களுக்குப் பாதித்தால் அவர்களுக்கெதிராக, மற்றவர்களுக்கு எதிராக தீமை செய்வேன் என்று பழிக்குப் பழி வாங்க துடித்துக் கொண்டிருக்கிறீர்களோ? நண்பர்களின் கேலி கிண்டல், காதல் தோல்வி வேலை கிடைக்க வில்லை என்ற விரத்தியினாலும், தீய நண்பர்களோடு சேர்ந்து கொண்டு, தீமை செய்கிறவர்களாய் சுற்றித்திரிகிறீர்களா? உங்களைத் தான் இயேசு நேசிக்கிறார்.

அம்மா அப்பாவிடமிருந்து நீங்கள் எதிர்பார்த்தவர்களிடமிருந்து, அன்பு, பாசம் கிடைக்கவில்லை என்றாலும் பரவாயில்லை சோர்ந்து போகாதிருங்கள். இயேசு உங்களை நேசித்ததால் தான் உங்களுக்காகவும், உனக்காகவும் தன் இரத்தத்தை சிலுவையில் சிந்தி தன் ஜீவனையே கொடுத்துள்ளார்.

**ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. யோவான் 15:13.**



எங்கள் பகுதியில் ஒரு அழகான வாலிபனின் தாய் வேறொரு நபரோடு தொடர்பு கொண்டுள்ளார். இதினாலே கோபப்பட்ட தகப்பன், அந்த தாயை வண்டியில் ஏற்றிச் சென்று, சாகடிக்க வேண்டும் என்று நினைத்து வேண்டுமென்றே ஒரு பஸ்ஸில் மோதி விபத்தை ஏற்படுத்தினார். அதில் தகப்பன் மரித்துப் போனார். அதன் பின்பு வாலிபன் குடியில் மூழ்கி, காதலில் விழுந்தான். அந்த பெண்ணின் தாயோடும் பழகினான், கடைசியில் இந்த தேவையில்லாத அனைத்தும் அவனை வேதனைப்படுத்தி தற்கொலை செய்து மரித்துப் போனான். எங்கு பார்த்தாலும் வித்தியாசமான, விகாரமான, வேதனையான காரியங்களை நாம் கேள்விப்படுகிறோம்.

அன்பு தம்பி, தங்கையே, இது போன்ற காரியங்களில் நீ எப்படியோ?, தெரியாமல் சிக்கியிருந்தாலும், இப்பொழுதே அதிலிருந்து வெளியே வந்துவிடு அல்லது உன் நண்பர்கள் யாராவது இப்படியிருந்தால் அவர்களை வெளியே கொண்டு வந்துவிடு. அவர்களையும் இயேசு நேசிக்கிறார் என்று சொல்லி சிலுவையண்டை அழைத்து வா. நிக்கியின் கண்கள் திறக்கப்பட்டது போல அவர்கள் கண்களும் திறக்கப்படும். உங்கள் தவறுகளிலிருந்து விடுபடுவதற்கும், இந்த பிரச்சனைக்கெல்லாம் ஒரே முடிவு சாவுதான் என்று சொல்லி தற்கொலைக்கு போகாதிருங்கள். உங்களை வாழ வைக்கவே இயேசு தன் உயிரை கொடுத்தார். நீங்கள் மனந்திரும்புங்கள். உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்.

**இயேசுவே எனக்காக மரித்தவரே, பாவிக்காக நீதிமானாகிய நீர் மரித்தீரே, என்னையும் நேசித்தீரே, நான் உம்மை நேசிக்கிறேன் இயேசுவே என்று சொல்லுங்கள். உங்களை ஒரு தாயைப் போல, ஒரு தந்தைப்போல அனைத்துக் கொண்டு ஆசீர்வதிப்பார்.**

நீங்கள் துரோகம் பண்ணின உங்களுடைய எல்லா துரோகங்களையும் உங்கள் மேலே இராதபடிக்கு விலக்கி, உங்களுக்குப் புது இருதயத்தையும், புது ஆவியையும் உண்டு பண்ணிக் கொள்ளுங்கள். **இஸ்ரவேல் வம்சத்தாரே நீங்கள் ஏன் சாக வேண்டும். மனந்திரும்புங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள். சாகிறவனுடைய சாவை விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். துன்மார்க்கன் சாகிறது எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.** எசேக் 18:31,32,23. நீங்கள் மனந்திரும்பி வாழ வேண்டும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக, இயேசுவுக்காக வாழ வேண்டும். நிக்கியைப் போல இயேசுவே எனக்காக மரித்தவரே, பாவிக்காக நீதிமானாகிய நீர் மரித்தீரே, என்னையும் நேசித்தீரே, நான் உம்மை நேசிக்கிறேன் இயேசுவே என்று சொல்லுங்கள். உங்களை ஒரு தாயைப் போல, ஒரு தந்தைப்போல அனைத்துக் கொண்டு ஆசீர்வதிப்பார். நீங்கள் வாழ்வதே, கிறிஸ்துவுக்குள் வாழ்வதே அவருக்குப் பிரியம். உங்களை அளவில்லாமல் நேசிக்கிற ஆண்டவர் இயேசுவின் நேசம் உங்கள் மேல் பொழியட்டும். நீங்கள் அவரை நேசித்து வாழ கர்த்தர் தாமே உதவி செய்வாராக.

# தேவ சத்தத்திற்கு கீழ்படி

காடுபட்டி என்ற கிராமத்தில் யுவராஜ் மற்றும் அவனது குடும்பமும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்தது ஒரு பனிப்பகுதியாக காணப்பட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் கடவுளுக்கு பிரியமில்லாத காரியங்களைச் செய்து வந்தார்கள். அந்த கிராமம் இருந்த இடத்திற்கு மேலே ஒரு பெரிய பனிப்பாறை ஒன்று பல ஆண்டுகளாக இருந்தது. அதன் கீழே அநேக வருடங்களாக ஜனங்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அந்தப் பாறை ஒருமுறை கூட சரிந்து விழவில்லை. ஆகவே அவர்கள் நம்பிக்கையோடு அந்த இடத்தில் வாழ்ந்து வந்தார்கள். யுவராஜ் மிகவும் நல்லவனாகவும், கடவுளுக்குப் பயந்தவனாகவும் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அந்த பனிப்பாறை உருகி அவர்கள் இருக்கும் இடம் முழுவதையும் மூடிவிடுவது போலவும், அங்குள்ள ஜனங்கள் அதில் மரித்துப் போவது போலவும் கனவு கண்டான். அதே போல் மற்றொரு நாள் அந்த கனவில் நடந்தது போல நிச்சயம் நடக்கும் என்று ஒருவர் தன்னிடத்தில் சொல்வதைப் போல கனவு கண்டான். ஆகவே இதைப் பற்றி அங்குள்ள தன் குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் எல்லாரிடத்திலும், நாம் யாவரும் இந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் போக வேண்டும் என்று சொன்னான். ஆனால் யாரும் அதை நம்பவில்லை, அவனைப் பார்த்து சிரித்து, கேலி செய்தனர். நாங்கள் பல ஆண்டுகளாக இங்கே வசிக்கிறோம் இது போல ஒரு சம்பவத்தை நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை என்றார்கள். அவன் எதையும் பொருட்படுத்தாமல் தன் ஜனங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று பல முயற்சிகளை செய்தான். ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை. தன் குடும்பத்தில் உள்ளவர்களும் அவன் சொன்னதை நம்பவில்லை. ஆனால் யுவராஜ் சொன்னதை அவன் குடும்பத்தில் உள்ள



ஒரு சிலர் மாத்திரம் நம்பினார்கள், எனவே அவர்கள் அனைவரும் சேர்ந்து பனிப்பாறை உருகி விழுந்தாலும் அதில் அவர்கள் சேதமடையாது அருகில் இருந்த மிக உயரமான மலையின் மீது மிகவும் கடினப்பட்டு வீட்டைக் கட்டி முடித்துக் குடியேறினார்கள். யுவராஜ் சொன்னது போலவே ஒரு நாள் இரவு அந்த பனிப்பாறை உருகி விழுந்து, அங்கிருந்த வீடு மற்றும் அனைவரையும் அழித்துப் போட்டது. யுவராஜ் வார்த்தையை நம்பினவர்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டனர். அங்கிருந்த அவன் குடும்பத்தாரும், கிராம ஜனங்களும் கடவுளுக்குப் பிரியமில்லாதவர்களாக வாழ்ந்த போதும், யுவராஜ் மட்டும் கடவுளுக்குப் பயந்து, நீதிமானாக வாழ்ந்ததினால் அவனும், அவன் வார்த்தைகளை நம்பினவர்களும் காப்பாற்றப்பட்டார்கள். கர்த்தரின் வார்த்தைகளை நம்புவோம், நன்மைகளைப் பெறுவோம். நம்மளச் சுற்றி நிறைய பாவமும், கெட்டதும் நடந்தாலும், தப்பு செய்ய வாய்ப்புக் கிடைத்தாலும் இயேசப்பா பிள்ளையாக வாழ்ந்தால், நாம ஆண்டவரின் வார்த்தையின்படி நடந்தால் நாமும் பாதுகாக்கப்படுவோம், மற்றவர்களையும் காப்பாற்றுகிறவர்களாக மாறுவோம் என்ன குட்டீஸ் எச்சரிக்கையைக் கேட்டு இயேசப்பாவிடம் ஓடி வந்து, பத்திரமாக நடந்துக்கோங்க.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, நாங்க செஞ்ச தப்பையெல்லாம், உங்க சொல் கேட்டு நாங்க நடக்காத எல்லாவற்றையும் எங்களுக்கு மன்னிங்க. இயேசப்பா அம்மா, அப்பா கண்டிக்கிறத கேட்டு, உங்க வார்த்தைக்கு பயந்து நடக்கவும், உங்களிடம் ஓடி வந்து பாதுகாப்பாக இருக்கவும், எங்களுக்கு உதவி செய்யுங்கப்பா.

## மனப்பாட வசனம்

கர்த்தரின் நாமம் பலத்த துருகம், நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்.

நீதி 18:10





சாட்சி பகுதி

# தேவனாலே எல்லாம் கூடும்



**சகோதரி. கௌசல்யா - கோயமுத்தூர்**

என் அம்மாவின் கர்ப்பபை உள்ளே சின்ன சின்ன கொப்பளங்கள் அதிகமாக இருந்ததால் அம்மாவுக்கு வயிற்றுவலியும், பெலவீனமுமாக இருந்தது. மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு, ஸகேன் எடுக்கச் சொன்னார்கள். ஸ்கேன் ரிசல்டை பார்த்த மருத்துவர்கள் கேன்சர் வியாதி என்றார்கள். இன்னும் ஒரு ஸ்கேன் எடுக்க வேண்டும், அதன் பிறகு கர்ப்பபையை எடுக்க வேண்டும் என்றார்கள். நாங்கள் வீட்டிற்கு வந்து மிகவும் வேதனையில் அழுதோம். தேவன் இயேசு வாழ்கிறார் ஊழியத்தை எனக்கு ஞாபகப்படுத்தினார். தொலைபேசி எண்கள் எனக்கு தெரியாது. நெட்டில் தேடி தொலைபேசி எண்ணை எடுத்து தொடர்பு கொண்டு, என் அம்மாவுக்கு தேவன் பரிபூரண சுகம்தர ஜெபிக்க கேட்டேன். சகோதரி அவர்கள் என் அம்மாவிற்காக ஜெபிக்கும் போதே எத்தனை முறை ஸ்கேன் எடுத்தாலும் ரிசல்ட்டில் கேன்சர் இல்லை என்று வரும்படிக்கும், நாங்கள் குடும்பமாக சாட்சியாக வாழ தேவன் செய்வார் என்று சொல்லி ஜெபித்தார்கள். அதே போல் கடைசியாக எடுத்த எம் ஆர் ஐ ஸ்கேனில் கேன்சர் இல்லை, அது சாதாரன கொப்பளம் சரியாகிவிடும் என்று மருத்துவர்களே சொல்ல வைத்தார் தேவன். அவர் எங்களுக்கு பாராட்டின கிருபை மகாபெரியது, ஜெபித்த உங்களுக்கு நன்றி, எங்களை சாட்சியாக நிறுத்தின தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்

**சகோதரி. விஜயா - சென்னை**

நான் பொருளாதாரப் பிரச்சனையினால் மிகவும் கஷ்டப்பட்டேன். பணம் வாங்கின இடத்தில் திரும்ப பணத்தை கொடுக்கச் சொல்லி நெருக்கினார்கள். என்ன செய்வது என்று தெரியவில்லை, இக்கட்டான சூழ்நிலையில் வேதனையோடு இருந்தேன். பண உதவி கேட்ட இடங்களில் இருந்து எந்த பதிலும் வரவில்லை, குறிப்பிட்ட நாளில் நான் பணத்தை செலுத்த வேண்டும், இப்படிப்பட்ட நிலையில் நான் தங்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, என் பணத்தேவை சந்திக்கப்படவும், நான் புறஜாதிகள் மத்தியில் வெட்கப்பட்டு போயிடாதபடிக்கு எனக்காக ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். நீங்கள் எனக்காக ஜெபித்தீர்கள் அன்று மாலையிலேயே நான் எதிர்பார்க்காத இடத்திலிருந்து எனக்கு பண உதவி கிடைக்க செய்து, தேவன் என் குறைவை நிறைவாக்கி, என் தலையை நிமிரச் செய்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

# வாருங்கள் இணைந்து ஊழியம் செய்வோம்!

# உடன் ஊழியர்கள் தேவை!

காலி பணியிடங்கள்

**ADMINISTRATIVE** OFFICER'S ........ 2

**Manager** Ministry Operation's ........ 1

**Office Assistant's** With Driving Skill ........ 2

**Cook** To cook for 20 Members ........ 2

**Volunteer** Prayer Warriors ........ 15

இப்பொழுதே! விண்ணப்பியுங்கள்

Whatsapp
+91 7825 04 7825
+91 9498 00 0449

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site
**MANAGER - MEDIA OPERATIONS**
Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid
**GRAPHIC DESIGNER**
Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid
**CONTENT WRITER**
Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site
**PROGRAM PRODUCER / DIRECTOR**
Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid
**VIDEO EDITOR**
Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site
**SOUND ENGINEEER**
Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid
**MOTION GRAPHICS DESIGNER**
Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site
**CAMERAMAN**
Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site
**PHOTOGRAPHER**
Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/
OR
Email : connect@dprince.in
OR
Whatsapp : +91 7825 04 7825
OR
Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

# நடப்பு செய்திகள்

## டிரைவரே இல்லாத பேருந்து.. சாலையில் 80 கி.மீ வேகத்தில் பாயும் - ஸ்காட்லாந்தில் அறிமுகம்

உலகின் முதல் தானியங்கி பயணிகள் பேருந்து சேவை இங்கிலாந்தில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சிகள் பல்வேறு துறையில் முன்னேற்றங்களைக் கொண்டு வந்துள்ள நிலையில், தற்போது போக்குவரத்துத் துறையில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. எத்தனையோ மாற்றங்களால் இன்று நாம் மிகவும் சொகுசான அதே நேரம் பாதுகாப்பான பயணத்தை மேற்கொண்டு வருகிறோம். அந்த வரிசையில் தற்போது இணைந்துள்ளது தானியங்கி பேருந்துகள். இந்த பேருந்துகள் ஓட்டுநர் இல்லாமல் தானே இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வகை பேருந்து சேவை ஸ்காட்லாந்தில் விரைவில் தொடங்கப்படவுள்ளது. இந்த பேருந்து சேவை 22 கிலோமீட்டர் தூரம் கொண்ட ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் இயக்கப்படும். ஒரே வழித்தடத்தில் இதே போல் ஐந்து பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. இந்த பேருந்தில் ஓட்டுநர் இருப்பார், ஆனால் அவர் இயக்காமல் பேருந்து தானாகவே இயங்கும். ஏதாவது அவசர நிலை ஏற்பட்டால் மட்டும் இருக்கையில் அமர்ந்திருக்கும் ஓட்டுநர் பேருந்தைக் கையாள்வார். மேலும், பேருந்தில் நடத்துநரும் இருப்பார், அவர் பயணச் சீட்டு வழங்குவது, பயணிகளின் தேவைகளை நிறைவேற்றுவது உள்ளிட்ட பணிகளைக் கவனிப்பார். இந்த பேருந்து மணிக்கு 80 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சோதனை ஓட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. அதனைத்தொடர்ந்து, இதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பேருந்து சேவை நிறுவனத்தின் அதிகாரி பீட்டர் ஸ்டீவன் ஸ்டேஜ் கோச் கூறுகையில், "தானியங்கி பேருந்துகளில் பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் முழுமையான தானியங்கி பேருந்து சேவையை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறோம்" என்று கூறியுள்ளார். இந்த பேருந்தில் ஆப்டிகல் கேமரா மற்றும் ராடார் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் பேருந்து சாலையில் பயணிக்கும் போது, அப்டிகல் கேமரா மற்றும் ராடார் உதவியோடு பேருந்து மற்ற வாகனங்களோடு மோதாமல் தடுக்கவும், சாலையில் ஜீப்ரா கிராசிங் போன்றவற்றில் மனிதர்கள் வரும் போது பேருந்தை நிறுத்தவும் முடியும். மேலும் செயற்கை நுண்ணறிவு எனப்படும் **AI** தொழில்நுட்பமும் இந்த பேருந்தில் இருக்கிறது. அதன் மூலம் பேருந்து எங்கிருக்கிறது, இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும், பேருந்து நிறுத்தத்தின் விபரங்கள் உள்ளிட்டவை கையாளப்படும். இந்த பேருந்து சேவை மிகவும் பாதுகாப்பானது என்பதோடு இந்த பயணம் ஒரு வித்தியாசமான அனுபவத்தை நிச்சயம் வழங்கும் என்கிறார் ஸ்டீவன். அதோடு இந்தப் பேருந்துகள் எரிபொருளை மிகவும் சிக்கனமாக கையாளும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சேவை வெற்றி பெற்றால் வரும் காலத்தில் இன்னும் நிறையத் தானியங்கி பேருந்துகளை இயக்கும் முடிவில் ஸ்டேஜ் கோச் நிறுவனம் இருக்கிறது.

செம்பட்டியில்

# இயேசுவின் பாதத்தில்

9 ஜூன்
வெள்ளிக்கிழமை
@10:00Am



Sis. Kala Vincent Raj    Bro. L. Vincentraj

இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

ஜூன்
10
சனிக்கிழமை
@10:00Am

உங்கள்
குடும்பத்திற்காக!, அற்புதத்திற்காக!, விடுதலைக்காக!,
சுகத்திற்காக! மன்றாட்டு ஜெபம்

செம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து
11.30AM மணி வரைக்கும் ஜெப
மையத்திற்கு வாகன வசதி உண்டு

இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME : JESUS LIVES TRUST | A/C NAME : L.VINCENT RAJ |
| BRANCH : KOCHADAI MADURAI | BRANCH : MADURAI |
| BANK NAME : UNION BANK OF INDIA | BANK NAME : AXIS BANK |
| A/C.NO : 493902010001022 | A/C.NO : 109010100247030 |
| IFSC CODE : UBIN0549398 | IFSC CODE : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**

WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# நம்பிக்கையின் இரவு
# NIGHT OF HOPE



## புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்

## மே 31

இரவு 10.30 மணி
முதல் 12.30 மணி வரை

**ஒவ்வொரு மாதமும் கடைசி நாள் இரவு 10.30 மணி முதல் மாதத்தின் முதல் நாள் 12.30 மணி வரை**

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் YOUTUBE சேனலில் ஒளிபரப்பாகிறது

உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்.
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்

அனுப்ப வேண்டிய எண்
**944 28 00 449**